**செய்தி வெளியீடு எண்: 504** **நாள்:27.10.2016**

**செய்தி வெளியீடு**

**<u>இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை – 106.</u>**

அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டை மற்றும் சென்னை ஆகிய இடங்களில் 2016 – 2017 ஆம் கல்வியாண்டிற்குரிய எம்.டி.(சித்தா) மருத்துவ பட்டமேற்படிப்பிற்க்கான மாணவர் சேர்க்கை ஒற்றைச் சாளர முறையில் கலந்தாய்வு சென்னை, அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்திலுள்ள தேர்வுக்குழு அலுவலகத்தில் 31.10.2016 அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். கலந்தாய்வு தகவல், தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே அழைப்புக்கடிதம் / குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி தகவல் / அழைப்புக்கடிதம் கிடைக்கப்பெறாதோர், வலைதளம் "www.tnhealth.org" –ல் தங்களது நுழைவுத் தேர்வு பதிவு எண் (E.E.No.) குறிப்பிட்டு தங்களுக்குரிய தகவல் / அழைப்புக்கடிதத்தை பதிவிறக்கம் செய்துக்கொள்ள வேண்டும். மேலும், விண்ணப்பதாரர்கள் அவரவர்க்குரிய மொத்த மதிப்பெண்ணுக்கு ஏற்றவாறு ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வு நாளில் தங்களது அனைத்து அசல் சான்றிதழ்களுடன் தகவல் தொகுப்பேட்டில் குறிப்பிட்டுள்ளவாறு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து, 26.10.2016 – அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ , சென்னையில் மாற்றத்தக்க வகையில் " Director of Indian Medicine and Homoeopathy, Chennai–106 " என்ற பெயரில் , ரூ.5,500/– (ரூபாய் ஐந்தாயிரத்து ஐநூறு மட்டும்) –க்கான கேட்பு வரைவோலையுடனும் கலந்து கொள்ள வேண்டும். மாணவர் சேர்க்கைக்கு இடஒதுக்கீடு ஆணை பெற்ற மாணவர்கள் அனைத்து அசல் சான்றிதழ்கள் மற்றும் கேட்பு வரைவோலையுடன் அன்றைய தினமே தேர்வுக்குழு அலுவலகத்தில் இயங்கும் உடனடி சேர்க்கை இடத்தில் (Spot Admission Counter) சமர்பித்து கல்லூரியில் இணைந்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. சேர்க்கைக்காக கூடுதல் அவகாசம் வழங்கப்படமாட்டது. மேலும் தரவரிசை மற்றும் இதர விவரங்களுக்கு "www.tnhealth.org " என்ற வலைதளத்தை தொடர்பு கொள்ளலாம்.

கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை,
சென்னை – 106.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**